[30th October 1962

விட்டால் இந்தத் தொல்லைகளெல்லாம் அனேகமாகத் தீர்ந்துவிடும் என்று நான் கருதுகிறேன். அதற்கு மேலே என்ன மாறுதல் செய்யவேண்டும் என்பதைக் குறித்து பின்னர்தான் யோசிக்கவேண்டும்.

மேலப்பாளையம் நகரசபை

* **943 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மேலப்பாளையம் நகரசபையிலிருந்து நகரசபையின் வருமானம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், நகரத்திற்கு வசதிகள் செய்துகொடுக்கும் பொருட்டு மானியம் கேட்டு தீர்மானம் ஏதாகிலும் அரசாங்கத்திற்கு வந்ததா ;

(இ) ஆமெனில், அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rural electrification

* 944. *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of villages where electric supply has not been provided;

(*b*) when will the scheme for rural electrification be given effect to in all the villages; and

(*c*) how many villages in Bhavani Constituency have not yet been provided with electric supply?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 6,200 as on 1st April 1962.

(*b*) By the end of the Third Five-Year Plan.

(*c*) Twenty villages.

* 945. *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the supply of electricity from Pennagaram to Perumbalai in Salem district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A scheme costing Rs. 3,43,200 has been sanctioned by the Madras State Electricity Board for extension of Electricity to Kalapambadi Chinnampalli and Perumbalai villages. This scheme which is expected to be completed by the end of this financial year will benefit 120 agricultural, 3 industrial and 46 domestic loads and also supply power to 75 street lights.

பெண்கள் நல இலாகா

* **946. கேள்வி—திரு. முனு ஆதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ;

1962-63-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை பெண்கள் நல இலாகா **(Women's Welfare Branch)** ஏற்படுத்த உத்தேசம் ?

30th October 1962]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No. Sir. There is no proposal to open new branches.

பிச்சைக்காரர்களுக்கான விடுதிகள்

*** 947 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்கார விடுதிகள் எத்தனை ;

(இ) அதிலுள்ள பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் ;

(உ) பிச்சைக்காரர் ஒழிப்பு முயற்சிகள் எந்த அளவு வெற்றி பெற நிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) பதினான்கு.

(இ) ஆயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு.

(உ) பிச்சையெடுப்பதை தடுப்பதற்கான எல்லா முயற்சிகளும் கூடுமான வரையில் அரசினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சியில் வெற்றி காண்பது பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கிறது.

திரு. இரா. நாராயணன் : பஸ் ஸ்டாண்டுகளிலும், மற்றும் அனேக இடங்களிலும் பிச்சைக்காரர்கள் தொந்தரவு அதிகமாக இருக்கின்றன. அதைச் சர்க்கார் கவனித்து, அவர்களுடைய வாழ்க்கை வீணாகப்போவதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போதே 14 பிச்சைக்கார விடுதிகள் இருக்கின்றன. அத்துடன் Care Camp-களும் இருக்கின்றன. மேலும் விடுதிகள் அமைக்கவேண்டுமென்றால், நகர மன்றத்தினரும், பொது மக்களும் மேலும் அக்கறை எடுத்துக்கொண்டால், இன்னும் அதிகப்படியான விடுதிகளை அமைத்து பிச்சைக்காரர்களுடைய தொல்லையை நீக்கி விடலாம்.

ஆரம்ப விடுதிகள்

*** 948 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிரைமரி ஹெல்த் சென்டர்களில், வெளியில் கிராமங்களில் சுற்றிப் பார்க்க ஒரு டாக்டரும், ஹெல்த் சென்டரில் ஒரு டாக்டருமாக இரண்டு டாக்டர்களை நியமிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No Sir.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு ப்ரைமரி ஹெல்த் ஸென்டரின் கீழ் மூன்று ஸப்-சென்டர்கள் இருக்கின்றன. ப்ரைமரி ஹெல்த் சென்டரைச் சேர்ந்த டாக்டர் மூன்று நாட்களுக்கு வெளியே சென்றுவிடுகிறார். இதனால் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் மூன்று நாட்களுக்கு எந்தவிதமான மருந்தும் கொடுக்கமுடியாமலிருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, அங்கே ஒரு டாக்டர் எல்லா நாட்களும் இருந்து மருந்துகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூன்று நாட்கள் டாக்டர் வெளியிலே போவது இல்லை. ஏதாவது ஸ்பெஸிபிக் இன்ஸ்டன்ஸ் இருந்து கனம் அங்கத்தினர் குறிப்பிட்டுச் சொன்னால், அதைக் கவனிக்கலாம். இரண்டு டாக்டர்களைத் தற்சமயம் போட முடியாது.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு ஹெல்த் ஸென்டரின் கீழ் மூன்று ஸப் சென்டர்கள் இருப்பதால், அந்த மூன்று இடங்களுக்கும் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டர் தான் போகவேண்டியிருக்கிறது. அதனால், ஹெல்த் சென்டரில் மருந்து கொடுக்க வசதிகள் ஏற்படுவதில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

(பதில் இல்லை).